**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வு, ஜூலை 2025**
**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்**
**மற்றும் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

ஜூலை 2025, மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் விடைத்தாள் நகலினை 13.08.2025 ( **புதன் கிழமை**) **பிற்பகல்** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Notification–ஐ Click செய்தவுடன் **HSE First Year Exam, JULY– 2025 – Scan Copy Download"** என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்,** இதே இணையதள முகவரியில் Notification ஐ Click செய்தவுடன் HSE 2025 JULY – FIRST YEAR "Application for Retotalling / Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் மேற்படி பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, அதனை 14.08.2025 ( **வியாழக்கிழமை**) **மற்றும்** 18.08.2025 (**திங்கட்கிழமை**) **ஆகிய நாட்களில்** (15.08.2025,16.08.2025 **மற்றும்** 17.08.2025 **அரசு விடுமுறை நீங்கலாக**) **காலை 11,00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திலும், தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் முதன்மைக்கல்வி அலுவலர்

அலுவலகத்திலும் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்/ முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

<u>மறுமதிப்பீடு</u>

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ. 505/– |

<u>மறுகூட்டல்</u>

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | – ரூ.305/– |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.205/– |

**ஒம்/---**
**இயக்குநர்**

நாள் : 12.08.2025
இடம் : சென்னை – 600 006.